# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண். 85/2018

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10 வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு ஜுலை மாதம் 22 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பெரியப்பன் | மதம் | : |
| த/பெ | : புச்சிகான் | ஜாதி | : |
| வயது | : | கிராமம் | : |
| தொழில் | : | வட்டம் | : |

**22.07.2024**

**வா.சா.1 திரும்ப அழைக்கப்பட்டு 2, 3 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. என்னுடைய பூர்விகமே காவேரிராஜபுரம் என்றால் சரிதான். எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் நிலத்திற்காக வழக்கு போட்டுள்ளேன். நிலம் என்னுடையது என வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆம். நிலத்தின் புல எண். சொல்ல முடியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து மேற்படி புல எண்ணில் மொத்தம் என்ன விஸ்தீரணம் இருந்தது என்பது தெரியுமா என்றால் 57 செண்ட் ஆகும்.

2. நான் வாங்கிய விஸ்தீரணம் சொல்ல முடியுமா என்றால் ஆறேகால் செண்ட் வாங்கினேன். நான் வாங்கிய கிழக்கு மேற்கு வடக்கு தெற்கு அடியளவு சொல்ல முடியுமா என்றால் தெரியாது. நான் கிரைய பெற்ற நிலத்தின் நான்கு எல்லை சொல்ல முடியுமா என்றால் கிழக்கு பக்கம் அரசன், மேற்கு பக்கம் எங்கள் நிலம், வடக்கு பக்கம் கருணாகரன் நிலம், தெற்கு பக்கம் கருணாகரன் நிலம் உள்ளது. தாவா சொத்து 57 செண்ட் விவசாய நிலம் என்றால் சரிதான். தாவா மொத்த சொத்தான 57 செண்ட்டில் கிணறு இருந்ததா என்றால் இருந்தது.

3. விவசாய நிலத்தில் வீடு கட்டமாட்டார்கள் என்றாலும் கிராம நத்தத்தில்தான் வீடு கட்டுவார்கள் என்று சொன்னால் நிலத்திற்கு பக்கத்தில்தான் ஊர் உள்ளது. தாவா சொத்திற்கு அருகே உள்ள சாலைக்கு மறுபுறம் சிறிது தள்ளி எனக்கு வீடு இருந்தது என்றால் சரிதான். நானும் என் தம்பி ஆறுமுகமும் பூர்வீக வீட்டில் இருந்தோம் என்றால் சரிதான். நான் அதே ஊரில் இன்றுவரை இருந்து வருவதால்

தாவா சொத்து ஆதியில் யாருக்கு சொந்தம் யாரிடம் இருந்து யாருக்கு வந்தது என்ற மொத்த வரலாறு எனக்கு தெரியும் என்றால் சரிதான். தாவா சொத்து ஆதியில் யாரிடம் இருந்தது என்றால் சாமைய்யா என்பவருக்கு சொந்தமானது ஆகும்.

4. சாமைய்யாவிற்கு எத்தனை வாரிசுகள் என்றால் 1. சித்திரை, 2. கொள்ளாபுரி, 3. அரசன் ஆகியோர் ஆகும். சாமைய்யாவிற்கு பொன்னன் என்ற மகன் இருந்தார் என்றால் எனக்கு தெரியாது. சாமைய்யாவிற்கு பொன்னன் என்ற மகன் இருந்தார் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் இதுவரை நான் பார்த்ததில்லை. அரசன்தான் சாமைய்யாவின் கடைசி மகன் என்றால் சரிதான். பிரதிவாதியின் கணவர் அரசன் வாதி மீது ஏற்கனவே வழக்கு தாக்கல் செய்து அது பிரதிவாதி கணவருக்கு சாதகமாக முடிந்துள்ளது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது.

5. இதே நீதிமன்றத்தில் அ.வ.எண்.616/1989 என்ற வழக்கு நடந்தது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. அரசனுக்கும் துரைக்கும் அடிக்கடி சொத்து சம்பந்தமாக தகராறு வரும் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. நான் துரையிடம் வாங்கிய சொத்திற்கு வில்லங்க சான்று எடுத்துப் பார்த்தேனா என்றால் பார்த்தேன். சொத்தின் பட்டா, சிட்டா, அடங்கல் யார் பெயரில் இருந்தது என்பதை பார்த்தேனா என்றால் துரை பெயரில் இருந்தது. தாவா சொத்து துரைக்கு எப்படி வந்தது என்று சொல்ல முடியுமா என்றால் அரசனுடைய அப்பா சம்பாதித்த சொத்தாகும்.

6. அரசனின் அப்பா சாமைய்யா பெயரில் ஏதேனும் பத்திரங்கள் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. பொதுவாக சொத்து கிரையம் வாங்கும் போது உரிமையாளர் பெயரில் உள்ள பத்திரங்கள் பட்டா, சிட்டா, அடங்கல் ஆகியவற்றை சரி பார்த்துதான் கிரையம் வாங்குவார்கள் என்றும் நான் மேற்படி ஆவணங்கள் பார்க்கவில்லை என வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது கிரைய ஆவணத்தில் அதை எழுதிக் கொடுத்தவருக்கு சொத்து எப்படி வந்தது என்ற விவரமே இல்லை என்றால் சரியல்ல. உண்மையிலேயே, துரை எனக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஆவணமான வா.சா.ஆ 1 ஆவணத்தில் அவருக்கு எப்படி பாத்தியம் என்ற விவரம் இல்லை என்றால் சரியல்ல.

7. துரைக்கு பூர்வீகமாக வந்ததாக நான் சொல்வதில் மேற்படி கிரைய ஆவணத்தில் எனது பாக சொத்து என துரை குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

உண்மையிலேயே துரைக்கு பூர்வீக பாத்தியப்பட்ட சொத்தாக இருந்திருந்தால் சாமைய்யாவின் 4 வாரிசுகளும் கிரைய ஆவணத்தில் கையெழுத்து செய்திருப்பார்கள் என்றால் சொத்தை சேர்ந்தவர்தான் கையெழுத்து போடுவார். தாவா சொத்திற்கும் துரைக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் தாவா சொத்தை விற்க துரைக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல. துரை எழுதிக் கொடுத்த வா.சா.ஆ 1 ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

8. சாமைய்யாவின் மற்ற வாரிசுகளையோ எனக்கு கிரையம் கொடுத்தவரையோ இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். சாமைய்யாவின் மக்கள் பாகம் செய்து கொண்டதற்கான ஆவணம் எதையும் பார்த்தேனா என்றால் நான் பார்க்கவில்லை. உண்மையிலேயே, எனக்கு கிரையம் கொடுத்த துரைக்கு ஏதேனும் பாத்தியம் இருந்திருந்தால் அவர் பெயரில் கூட்டு பட்டாவோ, தனி பட்டாவோ ஏற்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. சாமைய்யா பெயரில் பட்டா இருந்ததாக சொல்லியிருப்பதில் அந்த சாமைய்யா பெயரில் இருந்த பட்டாவை ஆவது நான் பார்த்தேனா என்றால் இல்லை. உண்மையிலேயே, நான் கிரையம் பெற்ற காலத்தில் சாமைய்யாவின் பட்டாவை பார்த்திருந்தால் அவரது வாரிசுகளிடமும் கிரைய ஆவணத்தில் கையெழுத்து பெற்றிருப்பேன் என்றால் அந்த நாளில் யார் பார்த்தார்கள்.

9. சாமைய்யாவின் மற்ற வாரிசுகள் அரசனுக்கு தங்கள் பங்கை எழுதிக் கொடுத்துவிட்டு சென்றுவிட்டார்கள் என்றால் சரியல்ல. 1945 க்கு முன்பிருந்தே சொத்து அரசனிடம்தான் தாவா சொத்து உள்ளது என்றால் சரியல்ல. அரசன் தாவா சொத்தையும் மற்ற சொத்துக்களையும் அடைந்து அனுபவம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. அ.வ.எண்.86/2018 என ஆறுமுகம் இந்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். ஆறுமுகமும் நான் வாங்கிய அதே தேதியில் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். நானும் என் தம்பி ஆறுமுகமும் கிரையம் பெற்ற பின் உட்பிரிவு செய்து பட்டா மாற்றியுள்ளோமா என்றால் இல்லை. பட்டா மாறுதலுக்கு மனு எதுவும் கொடுத்தோமா என்றால் கொடுத்தோம். அதை ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன்.

10. என் தம்பி தாக்கல் செய்துள்ளதும் இதே புல எண்ணிற்கு என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வீட்டு வரி ரசீதுகள் ஒவ்வொன்றும் ஒவ்வொறு எண்ணிற்கு உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி ரசீதுகளில் வீட்டு எண். 196B, 196 C,

எனவும் வரி விதிப்பெண்கள் 2/219, 686, 640 எனவும் வேறுபட்டு உள்ளது என்றாலும் நான் எனது பூர்வீக வீட்டிற்குள்ள ரசீதை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தின் சர்வே எண் வேறு என்றாலும் வரி ரசீதுகளில் நில அளவை எண்.315 என குறிப்பிடப்பட்டுள்ளது வேறு புல எண் என்றாலும் சரியல்ல. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மின் கட்டண ரசீதுகள் எனது பூர்வீக வீட்டிற்குரியது என்றாலும் தாவா வீட்டிற்குரியது இல்லை என்றாலும் சரியல்ல.

11. நான் தாக்கல் செய்துள்ள கொடிவழி ஜாபிதாவில் சாமைய்யாவின் மற்றொரு வாரிசை சேர்க்காததால் கொடிவழி ஜாபிதா ஏற்றுக் கொள்ளத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்கிய காலத்தில் பட்டா அரசன் பெயரில்தான் இருந்தது என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 6 ஆவணத்திலேயே அரசனின் மகன், மனைவி பெயரில்தான் பட்டா உள்ளது என்றால் சரியல்ல. உண்மையிலேயே தாவா சொத்து துரைக்கு சொந்தமாக இருந்திருந்தால் நான் கிரையம் வாங்கிய காலத்திலேயே பட்டா என் பெயரில் மாற்றியிருப்பேன் என்றாலும் அது துரைக்கு சொந்தமில்லை என்பதால்தான் பட்டா மாற்ற இயலாமல் இருந்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

12. நான்தான் தாவா சொத்தை அனுபவித்து வருகிறேன் என்பதைக் காட்ட பட்டா, சிட்டா, அடங்கல் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் துரையை என் தரப்பில் சாட்சியாக விசாரிக்க போகிறேனா என்றால் இல்லை. தாவா சொத்து அரசனுக்கு சொந்தமானது என்றாலும் துரைக்கு எந்த பாத்தியமும் இல்லை என்றாலும் சரியல்ல. தாவா சொத்தை இன்றுவரை பிரதிவாதிகள்தான் அனுபவித்து வருகிறார்கள் என்றாலும் நான் தாக்கல் செய்துள்ள வீட்டு வரி ரசீதுகள், மின் கட்டண ரசீதுகள் பூர்வீக வீட்டிற்குரியது என்றாலும் சரியல்ல. சாமைய்யாவின் அனைத்து வாரிசுகளிடமிருந்து நான் கிரையம் வாங்காததால் எனது கிரையம் செல்லத்ததக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் கிரைய ஆவணம் பதிவு செய்யும்போது மற்ற வாரிசுகளிடமும் கையெழுத்து பெற்றேனா என்றால் இல்லை.

13. சாமைய்யாவின் மற்ற வாரிசுகளை தரப்பினராக சேர்க்காததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கது இல்லை என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தை உண்மையான உரிமையாளரிடமிருந்து வாங்காததால் எனது வழக்கு நிலைநிற்கத்தக்கது இல்லை என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை 4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பு**

14. வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்து ஆதியில் யார் பெயரில் இருந்தது என்றால் சாமைய்யாவின் பெயரில் இருந்தது. நான் சொல்வது தவறு என்றாலும் தாவா சொத்து ஆதியில் அரசு பெயரில் தான் இருந்தது என்றாலும் சரியல்ல. அரசன் இறந்த பின்பு முறையாக விசாரணை செய்துதான் அரசன் பெயரில் இருந்த பட்டா அவர்கள் வாரிசு பெயரில் மாற்றப்பட்டது என்றால் சரியல்ல. இன்றுவரை பட்டா அவரது வாரிசு பெயரில்தான் உள்ளது என்றால் சரியல்ல. நான் எனது சுயலாபத்திற்காக அரசு மீது இந்த பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் 4 முதல் 7 பிரதிவாதிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் தேவையற்று அவர்களை வழக்கில் சேர்த்துள்ளோம் என்றாலும் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)